**கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் (சிறப்பு நிலை) பேரூராட்சி செயல் அலுவலர் செயல் முறைகள்**

**முன்னிலை திரு. அ. சதீஷ் குமார்**

ந.க.எண். 1089/2023 /ஆ நாள். 25.07.2024

பொருள் : திட்ட அனுமதி - குடியிருப்பு மனைப்பிரிவு - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் / பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண். 500/1A2, 501/2A2ல் 2.29¾ ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டது - இறுதி அங்கீகாரம் வழங்கி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1) மனுதாரர்கள் தி/வா. கந்தசாமி, கோவிந்தசாமி, கோயம்புத்தூர் இணைய வழி விண்ணப்பம் எண். CBELPA/G0ZO6MPL/2022/ TCP, நாள். 28.12.2022.
2) இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடிதம் ந.க.எண். CBELPA/G0ZO6MPL/2022/ TCP நாள். 01.02.2023.
3) சூலூர் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரம் ஆவண எண். 7379 / 2023, நாள். 15.05.2023 (ம) 7380 / 2023, நாள். 15.05.2023.
4) இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் உள்ளூர்த் திட்டக்குழுமம் அவர்களின (இணைய வழி) நடவடிக்கைகள் ந.க. எண். CBELPA/G0ZO6MPL/2022/ TCP, நாள். 08.06.2023 திட்ட அனுமதி எண். 327 / 2023
5) சூலூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 85/2024 நாள். 22.07.2024
6) இவ்வலுவலக செலுத்துச் சீட்டு எண். 644/2024-2025, நாள். 25.07.2024.

-------

**உத்தரவு :-**

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பேரூராட்சி மற்றும் கிராமம், க.ச.எண். 500/1A2, 501/2A2ல் 2.29¾ ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கக் கோரி பார்வை 1ல் காணும் விபரப்படி விண்ணப்பிக்கப்பட்டு, விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2ல் காணும் கடிதம் வாயிலாக மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் பார்வை 3ல் காணும் விபரப்படி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சூலூர் பேரூராட்சி மற்றும் கிராமம் க.ச. எண். 500/1A2, 501/2A2ல் 2.29¾ ஏக்கர் பரப்பளவில் (50 மனைகள்) அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு உள்ளூர்த் திட்டக்குழும தீர்மானத்தின்படியும், சிறப்பு மற்றும் இதர நிபந்தனைகளின்படியும் ம.வ/ந. ஊ.இ எண். 289 / 2023 என்ற எண்ணில் தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண். 327 / 2023 என்ற எண்ணிடப்பட்டு பார்வை 4ல் காணும் நடவடிக்கைகளின்படி திட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் வழங்க பார்வை 5ல் காணும் பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் அதன்படி மனைப்பிரிவுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் பார்வை 6ல் காணும் விபரப்படி பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பேரூராட்சி மற்றும் கிராமம், க.ச.எண500/1A2, 501/2A2ல் 2.29¾ ஏக்கர் பரப்பில் (50 மனைகள்) அமையும் பார்வை 4ல் காணும் நடவடிக்கைகளின்படி திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வை 5ல் காணும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், கோயம்புத்தூர் மாவட்ட உள்ளூர்த் திட்டக்குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்பு மற்றும் இதர நிபந்தனைகளுக்குட்பட்டும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள் :-

1) இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர்த் திட்டக் குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91ஏ, நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35 – 1972) ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2) பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 1972) ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர் / அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம்.
3) இறுதி அனுமதி அளித்த பிறகு (1) இறுதி அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் இறுதி அனுமதியினை மாற்றவோ, ரத்து செய்யவோ உரிமையுண்டு.
4) திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.
5) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட இறுதி அங்கீகாரம் இரத்து செய்யப்படும்.
6) மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மேற்கொள்ள வேண்டும். தங்களால் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளராகிய தங்களையே சாரும்.
7) பராமரிப்பு காலத்தில் பராமரிப்புப் பணிகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளர் ஆகிய தாங்கள் மேற்கொள்ள தவறினால் அப்பணிகள் பேரூராட்சி வாயிலாக மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை தங்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும்.

25/7/24

செயல் அலுவலர்
சூலூர் சிறப்பு நிலை பேரூராட்சி
கோயம்புத்தூர் - 641 402

**இணைப்பு**:-

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள்

25/7/24

பெறுநர் :-

திருமதி. கந்தசாமி, கோவிந்தசாமி
14, திருச்சி ரோடு, சூலூர், கோயம்புத்தூர்.

நகல்:-

சார் பதிவாளர், சூலூர்.